பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 28 திதியை 27 சு ஆடி 2 இதழ் 88

யாழ்ப்பாணம் புதன்கிழமை 10-5 79

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

பஸ் விபத்து: 32 பேர் பலி!

புதுடில்லி, மே 9

திருமணக் கோஷ்டியினர் பிரயாணஞ்செய்த பஸ் ஒன்று, விபத்துக்குளானதில், 32 பேர் பலியானார்கள். காயமடைந்த 31 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பஸ், பாலமொன்றைக் கடந்துசென்றுகொண்டிருந்தபோது, பாலத்தையிட்டு விலகி ஆற்றில் விழுந்தது. 32 பேரும் அந்தஸ்தலத்திலேயே மாண்டனர்.

இச்சம்பவம், மத்திய பிரதேசத்தில் இன்று நிகழ்ந்தது.

500 பொலிஸார் யாழ்.வருகை!

முழுவீச்சில் இறங்கத் திட்டம்!

(கொழும்பு)

வட பகுதியில் தலைதூக்கிய கொலை, கொள்ளை மற்றும் வன்செயல்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிஸ் பகுதி இப்பொழுது முழு வீச்சில் இறங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக பயிற்சி பெற்ற ஐநூறு பொலிசார் அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம் புறப்படுகின்றனர். இதுசம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா கவனித்துவருகின்றார்.

மேலும் மூன்று இளைஞர்கள் விசாரணை

மல்லாகத்திலிருந்து அழைத்துவரப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாக மல்லாகத்தில் நேற்று 3 இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் பொலிசாரினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் புலோலி வங்கிகொள்ளை தொடர்பாக பிணையில் விடுதலைசெய்யப்பட்ட ஒருவரும் இருக்கின்றார். மற்றொருவர் இளைஞர் இயக்கமொன்றில் முக்கிய நபராவர்.

இவர்கள் மூவரும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டனர்.

வடபகுதியில் நடந்த வங்கிக்கொள்ளைகள் தொடர்பான இளைஞர்களையும் பிணையில் விடப்பட்ட இளைஞர்களையும் இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாக விசாரணைசெய்து வருகின்றனர்.

சம்பவம் நடந்த தினத்திற்குப் பின் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 3 இளைஞர்களும் தொடர்ந்து பொலிசாரினால் தடுத்துவைக்கப்பட்டு, விசாரணைசெய்யப்பட்டுவருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திற்கு இவ்வார இறுதியில் 50 புதிய பொலிசார் வரவிருக்கிறார்கள். இவர்களைத் தொடர்ந்து மேலும் 50 புதிய பொலிசார் அடுத்தவாரம் வடபகுதிக்கு வரவிருக்கிறார்கள். வடபகுதி பொலிஸ் பிரிவுக்கு சில வாகனங்களும் வந்தசேருமெனப்

[6ம் பக்கம் பார்க்க]

முன்னாள் இத்தாலியப் பிரதமரின்

சடலம் காரில் கண்டெடுக்கப்பட்டது!

இரண்டுமாத நாடகம் முடிந்தது

லண்டன், மே 9 செய்யுமாறுகோரி செய்யப்பட்ட செய்படையினரால் கடத்தப்பட்ட [illegible] மீட்கப்பட்ட முன்னாள் 16ம் தடவை திரு மொரோவை இத்தாலியப்பிரதமர் அல்டோ கடத்திச்சென்றனர். 13 தமிழ் வாதிகளையும் விடுதலை செய்யாவிட்டால் முன்னாள் இத்தாலியப்பிரதமர் மொரோவை கொலை செய்து விடுவோம் என்று செய்படையினர் பல தடவைகள் எச்சரிக்கை விடுத்திருந்தபோதிலும், இத்தாலிய அரசாங்கம் இக்கோரிக்கைகளுக்கு பணிய மறுத்தது.

"கோரிக்கைக்கு தயவு செய்து இணங்கிவிடுங்கள். எம்மைக் கொன்றுவிடப்போகிறோம்

[6ம் பக்கம் பார்க்க]

வடபகுதி

வீடமைப்புத் திட்டத்துக்கு இவ்வருடம் 23 லட்ச ரூபா!

(யாழ்ப்பாணம்)

"சுயமுயற்சி வீடமைப்புத் திட்டத்திற்கும், வீடுகட்டுவதற்கு கடன்வழங்குவதற்காக இவ்வருடம் இருபத்துமூன்று லட்ச ரூபாவை வீடமைப்பு இலாகா, வடபகுதிக்கு ஒதுக்கியுள்ளது. இத்தொகை கடந்த காலங்களில் வழங்கப்பட்ட தொகையிலும் மிகக்கூடுதலானது. யாழ். வீடமைப்பு இலாகாவின் ஊழலற்ற நிர்வாகத்திறமையினாலேயே இப்பெருநன்மையை வடபகுதி மக்கள் அடையக்கூடியதாக இருக்கிறது" என்று வடபிரதேச வீடமைப்பு இலாகா உதவி ஆணையாளர் திரு. எம். இராஜரட்ணம் "ஈழநாடு"க்கு தெரிவித்துள்ளார்.

"23லட்ச ரூபாவில் 15லட்ச ரூபா சுயமுயற்சி வீடமைப்புத் திட்டத்திற்கும் 8 லட்ச ரூபா வீடு கட்டுவதற்குக் கடனுதவும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் இப்பொழுது திவிரப்படுத்தப்பட்டுள்ளன" என்றும் அவர் தெரிவித்தார்.

சுயமுயற்சி வீடமைப்புத் திட்டத்தின் அடிப்படையில், காவலூர் எம். பி. பண்டிதர்

[6-ம் பக்கம் பார்க்க]

கைதடி சித்தவைத்தியக் கல்லூரி கட்டிடம்

யாழ். வளாகத்திற்கு இன்று கையளிக்கப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

கைதடி சித்தவைத்தியக் கல்லூரிக்கட்டிடம் யாழ். வளாகத்திற்கு இன்றுகையளிக்கப்படுகிறது. இன்று காலை 8-30 மணிக்கு யாழ் வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கட்டிடத்தைக் கையேற்கிறார். யாழ். வளாகத்தின் வைத்தியப்பிரிவு இக்கட்டிடத்தில் இயங்கும்

1967-ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயகா பிரதமராகிருந்த போது ஆயுர்வேதக்கல்லூரிக்கென அடிக்கல் நாட்டப்பட்டு கடந்த நான்கு வருடங்களின் முன் பூர்த்தியான இக்கட்டிடம் இதுவரை எதுவித பாவனைக்கும் பயன்படுத்தாமலேகிடந்து வந்தது. சித்தவைத்தியக் கல்லூரியை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் திட்டம் ஏனோ செயற்படாதிருந்தவந்தது

சித்தவைத்தியக் கல்லூரியைத் தனிரவேற நோக்கங்களுக்கு அரசு இக்கட்டிடத்தைப் பயன்படுத்தக் கூடாதெனப் பல சங்கங்களும், பொதுஸ்தாபனங்களும் கேட்டிருந்தபோதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையிலேயே இக்கட்டிடம் யாழ் வளாகத்திற்கு வழங்கப்படுகிறது.

யாழ். வளாகப் புதிய கட்டுடவேலைகள் பூர்த்தியானதும் புதிய கட்டிடத்திற்கு வைத்தியப்பிரிவு மாற்றப்படுமெனத் தெரியவருகிறது.

(கா-ஆ)

ஆயுர்வேத ஆஸ்பத்திரி அடுத்த மாதம் திறக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி எதிர்வரும் ஜூன் மாத இதுதியில் திறக்கப்படவிருக்கிறது.

இதுவரை வெளிநோயாளர் பிரிவுடன் மட்டும் இயங்கிவந்த இந்த ஆஸ்பத்திரி, எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறத்தக்க வகையில் 150 படுக்கைகள் கொண்டதாகப் புதிய பிரிவுக் கொண்டிருக்கும்.

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்பிரிவில் பணியாற்றுவதற்கு வைத்திய நிபுணர்களும் ஊழியர்களும், இப்பந்திகளும் நியமிக்கப்படவுள்ளனர். தற்போது இவ்வாஸ்பத்திரியில் டாக்டர் எக். கந்தையா பணியாற்றுகிறார்.

வரி விளம்பரம்

தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை சம்பளம் ரூபா ஆறு கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவி இளாக் ஆன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி 9224

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள C N தொடர்பிலக்க 25 D C C மோட்டார்சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு W A. தருமராசா, ஞானசம்பந்தர் ஒழுங்கை, வட்டுக்கோட்டை. 9266

விருடியோ ஒன்றுக்குரிய சகல புகைப்படக் கருவிகளுக் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு 38, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 9262

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க

பகிரங்க ஏலவிற்பனவு

மேற்படி சங்கத்தில் பின் வரும் பொருட்கள் 28-5-78 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனவு மூலம் விற்கப்படும். ஏலத்தில் பொருட்களை பெற்றுக்கொண்டவர்கள் உடனே பணத்தைக்கட்டி பொருட்களை எடுத்துக்கொள்ள வேண்டும். பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

1. பெயின்ற வகை
2. ரேப்பன் றைன்
3. திருக்குகள்
4. பிணைசங்கள்
5. என்ஜினியரிங்நட்
6. கம்பி ஆணி
7. ஜன்னல் கொழுக்கி
8. அரத்தாள்
9. பூட்டு வகைகள்
10. மின்சார வயர்
11. கோஸ் பைப்

பொதுமுகாமையாளர்

9268

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கூட்டணிக்கிளை

[ஆனைக்கோட்டை]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனைக்கோட்டைக் கிளை மாணிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: இ. விஸ்வலிங்கம், உபதலைவர்: எம். அமிரன், செயலாளர்: சி.ஜெயானந்தன், உபசெயலாளர்: இ. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: ச. சண்முகநாதன் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

.....

கிராமசேவகர் இடமாற்றம்

(சுழிபுரம்)

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்கு கிராம சேவையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட சுழிபுரம் கிழக்குப் பிரிவுக்கு கிராமசேவையாளர் இம்மாதம் முதல் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

சுழிபுரம் கிழக்குப் பகுதிக்கு தெல்லிப்பளை வடமேற்குப் பகுதியில் கடமையாற்றிய திரு. ம. மகாதேவா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சுழிபுரத்தில் கடமையாற்றிய திரு. மு. தர்மதாசன் தொல்புரத்திற்கும், தொல்புரத்தில் கடமையாற்றிய க. செல்வநாயகம் வட்டு மேற்குக்கும், வட்டுமேற்கில் கடமையாற்றிய திரு. எம். பரமலிங்கம் அளவெட்டி வடக்குப் பகுதிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பரிசளிப்பு விழா

[அரியாலை]

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 26ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இப் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக கொழும்பு அத்தியட்சாதீன ஆயர் அதிவணக்கத்துக்குரிய சுவிதின் பெரேராண்டோ அடிகள் கலந்து கொள்ளவிருக்கிறார்.

பரிசில்களை திருமதி சுவிதின் பெரேராண்டோ வழங்குவார்கள். கல்லூரி அதிக்கையை கல்லூரி அதிபர் திரு சி. ஈ. ஆனந்தராஜா சமர்ப்பிப்பார். (உ)

த.ஈ.க.செயற்குழு கூடுகிறது

[வண்ணார்பண்ணை]

தமிழர் சுயாட்சிக்கழத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 14-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

சங்கத் தலைவர் திரு. வ. நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தொகுதிகள் தோறும் கழக அமைப்பாளர்களை நியமித்தல், உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் தோறும் பிரதிநிதிகள் தெரிவு செய்தல், கருத்தரங்குகளை நடத்துதல், வருடாந்த மகாநாடு நடத்துதல், கழகப்பத்திரிகைகளை வெளியிடுதல், கழகத்திற்கு அச்சகம் ஒன்றை வழங்குதல் உட்பட இன்றைய அரசியல் நிலைமைகள் பற்றி ஆராய்தல் ஆகிய விடயங்கள் பரிசீலனை செய்யப்படவிருக்கின்றன. இதற்கான குழுக்களும் தெரியப்படும். [உ]

முனாஞன் யாழ். விரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திரு.சிவஞானரத்தினத்திற்கு கிளை ஊழியர்கள் அளித்த பிரியாவிடை வைபவத்தில்போது திரு/திருமதி சிவஞானரத்தினம் தம்பதிகளை விழா அமைப்பாளர் திரு. கீழ்க்கரவை பொன்னையாவும் செல்வி இராசையாவும் மலர்மாலை சூட்டி வரவேற்றனர். படப்பிடிப்பு — "ரவி"

விபத்தில் சிக்கிய விமானம் கடலில் மிதந்தது

60 பேர் உயிர் தப்பினர்

புளோரிடா, மே 9

புளோரிடாவில் கடலில் விழுந்த அமெரிக்க விமானம் ஒன்றிலிருந்த 60 பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்த ஜெட் விமானம் கடற்கரையை ஒட்டிய பகுதியில் விழுந்துமிதந்து கொண்டிருந்ததாகவும், அதிலிருந்த இவ்விமானத்தில் இருந்தவர்கள் படகுகள், ஹெலிகொப்டர் விமானங்கள் மூலம் கரைசேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விமான நிலையம் ஒன்றில் இறங்குவதற்கு ஆயத்தமான போது விமானநிலைய ஓடுபாதைக்கு சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலேயே இவ்விமானம் விழுந்ததாம். (இ)

கணவன் - மனைவி பணத்தகராறு: ஆஸ்பத்திரியில் கணவர்

(யாழ்ப்பாணம்)

பணத் தகராறு காரணமாக தனியாகப் பிரிந்திருந்த கணவனை மனைவியும், சகோதரர்களும் அடித்துக் காயப்படுத்திய தாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று நல்லூரில் நிகழ்ந்துள்ளது.

கணவன் பலத்த காயங்களுடன் இரத்தம் சிந்திய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த கணவரான சுப்பிரமணியமும் மனைவி சிவபாக்கியமும் பூநகரியில் வசித்து வந்ததாகவும் அண்மையில் இவர்களுக்கிடையே எழுந்த பணத் தகராறு காரணமாக மனைவி கணவனைவிட்டுப் பிரிந்து நல்லூரில் வந்து தங்கியிருந்ததாகவும் பின்னர் நேற்று சுப்பிரமணியம் மனைவியைத்தேடி நல்லூருக்கு வரவே அங்கே மனைவியும் அவரது சகோதரர்களும் கணவரை தாக்கி புடைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

அடுத்து இரத்தம் வழிந்த நிலையில் கணவர் யாழ். ஆஸ்

(5ம் பக்கம் பார்க்க)

சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா

[கொழும்பு]

'அமுதன்' எழுதிய "மாரீசம்" சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டுவிழா நோர்வூட் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மண்டபத்தில் இம்மாதம் 28ம் திகதி ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் கலாநிதி அ. சிவராசா, திரு. இராஜலிங்கம் உட்பட பலர் பங்குபற்றி உரைநிகழ்த்துவார்கள். விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாகத் திருச்செந்தூரன் தயாரித்தளிக்கும் 'காமன்கூத்து' நாடகம் இடம் பெறும். [அ]

.....

அப்பர் சுவாமிகள் குருபூசை

(சரவணை)

சரவணை - "தேவபுரம்" ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் அப்பர் சுவாமிகள் குருபூசைத்தினம் அனுட்டிக்கப்பட்டது.

தேவஸ்தான சைவஇளைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற ஒவ் வைபவத்தையொட்டி மகேஸ்வரபூசையும் இடம் பெற்றது. (உ)

தேவை

1. காசாளர்
2. வாகனங்கள் பறிமுதல் செய்வோர் (Car Seizer)

பிரபல்யம் வாய்ந்த பிறன்ஸ் கொம்பனியின் யாழ்ப்பாண கிளை ஒன்றுக்கு மேற்கூறானும் வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்கள் தேவை.

தகைமை, அநுபவம் மற்றும் முழு விபரங்களுடன் கிளாரிசு செய்யும் இருவரின் பெயர்களையும் குறிப்பிட்டு மே மாதம் 20-ந் திகதிக்கு முன்னாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9265, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9265

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

(வரைவுள்ளது)

பதவிகள் வெற்றிடம்

78-05-08 ஆம் திகதிய மேற்படி விளம்பரத்தில் கணக்கு எழுதுநர் தரம் 11 என்ற பதவிக்குரிய சம்பளம்

180 — 304
..... ஆகும். விளம்பரத்தில்
6X10 — 8X8

120 — 304
..... எனஇருப்பது தவறாகும்.
6X10, 8X8

பொதுமுகாமையாளர்

9257

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.

பதவி வெற்றிடங்கள்

சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர்கள் தரம் 111

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 24-5-78-ந் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சங்கத் தொழிற்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

வயது: 21 — 30

தராதரம்: 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண தரச்) சித்தியும், ஒரு வருட கால அனுபவமும்.

சம்பளம்: 180 — 320
.....
8X10, 10X6

பொதுமுகாமையாளர்.

கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்,
1978-05-06. 9263

அறிவித்தல்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள இராணி ஸ்ரோர்ஸில் கடமையாற்றிய (திரு V. புஷ்பராஜ்) 7-5-78 முதல் மேற்படி ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டார். குறித்த திகதியின் பின் மேற்படி ஸ்தாபனத்தின் பெயரால் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத்தருகின்றோம்.

க. குலசிங்கம்.
உரிமையாளர்,
இராணி ஸ்ரோர்ஸ்,
121, கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
9270

ஈழநாடு
The Eelanaadu

காணாமல்போன ஆவணங்கள்

நீதியமைச்சில் இருந்த அதிமுக்கிய ஆவணங்கள் சில காணாமல் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் ஆணைக்குழு சட்ட அமைப்புகள் தொடர்பான முக்கிய ஆவணங்களும் இதில் அடங்கும்.

இந்த ஆவணங்கள் எப்படிக் காணாமல் போயின என்பதைக் கண்டறியும்படி துப்பறியும் பொலிசார் கோரப்பட்டுள்ளனர்.

குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழு விசாரணைகள் தொடர்பான தன்தாவேஜுகள் அடங்கிய ஆவணங்களும் காணவில்லை எனத் தெரிகின்றது. இந்த ஆவணங்களில் பலவழைய கடதாசிகள் என்ற முறையில் சேகரிக்கப்பட்டு வாழைச்சேனையிலுள்ள கடதாசி ஆலைக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்று துப்பறியும் பொலிசார் கருதுகின்றனராம்.

இதேசமயம், நீதி அமைச்சில் இருந்த பல ஆவணங்கள் முன்னாள் நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா பதவியிலிருந்த காலத்தில் அவர் மேற்பார்வையிலே யே எரித்து அழிக்கப்பட்டுவிட்டதாக இப்போதைய நீதியமைச்சர் திரு. கே.டபிள்யு. தேவநாயகம் கடந்தவாரம் தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

"இந்த ஆவணங்களில் ஒன்று மட்டும் எஞ்சியிருக்கிறது என்று தெரிகிறது. ஏனென்றால் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பிரதமர் மந்திரிக்கு எழுதிய கடிதம் ஒன்றுடன் ஒரு ஆவணத்தின் புகைப்படப் பிரதி யொன்றையும் சேர்த்து அனுப்பியிருக்கிறார். இதிலிருந்து அந்த ஆவணத்தின் மூலப்பிரதி அவரிடமே இருக்கவேண்டும்" என்று திரு. தேவநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்க பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குற்றவியல் நீதி ஆணைக்குழு சட்டம் உருவாக்கப்பட்டதில் தமக்கும் பொறுப்பேதும் இல்லையென்று நட்டிக் கழிக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஆவணங்கள் எப்பொழுது அழிக்கப்பட்டன, அல்லது காணாமல் போயின என்பது பற்றி துப்பறியும் பொலிசாரின் விசாரணைகளின் பின்தான் தெரியவரும்.

ஆனால் ஒரு முக்கியமான அமைச்சிலிருந்து அதிமுக்கியமான தன்தாவேஜுகள் காணாமல் போவதென்பது பாரதூரமான விஷயமாகும்.

ஆவணங்களில் முக்கியமானவை, முக்கியமில்லாதவை என்று புரிந்து கொள்ள முடியாதவர்கள் முக்கியப் பொறுப்புக்களில் இருந்திருக்க முடியாது. முக்கியமான ஆவணங்கள் அழிக்கப்பட்டிருப்பின், அது ஏதோ அடிப்படையைக் கொண்டே செய்யப்பட்டிருக்கவேண்டும். அந்த அடிப்படையைக் கண்டறியவும் அதன்மீது நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமை.

இந்த வகையில் அரசு இப்பொழுது எடுத்துவருகிற நடவடிக்கைகள் பலருக்கரமான தகவல்களை வெளிக்கொணரக்கூடும்.

அடிக்கல் நாட்டுவிழா

[வாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆத்திகுடி கலைமகள் சனசமூக நிலைய வெள்ளிவிழா மண்டபத்துக்கான அடிக்கல், தோழில் அதிபர் திரு. க. கனகராஜாவினால் நாட்டப்பட்டது.

எஸ். கி. ஆர் பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். நியாகராஜா மங்கள விளக்கேற்றி வைத்தார். [உ]

வரத்தலத்திற்கோர் வரப்பிரசாதம்

எங்கள் நாயகன் விநாயகன் பிரணவ சொரூபி, அன்போடு வழிபடுவோருக்கு இன்னருள் புரிபவர் அப்பெருமானுக்கு ஈழத்திருநாட்டிலே ஏழு ஆலயங்களை மாருதப்புரவீகவல்லி அமைத்தார்கள். அவற்றுள் இரண்டாவது திருத்தலமாக விளங்குவது பன்னாலை வரத்தலமாகும்.

இத்தலத்து எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகரை எண்ணியர் எண்ணியாங் கெய்தினர். வழிபட ஆகம முறைப்படி அர்ச்சித்த ஆதிசைவப் பிராமண உத்தமரான பிரமஸ்ரீ சபாரத்தின சர்மா அவர்களை ஆசார்ய அபிஷேகம் பெறுவது பொற்புடையதே.

இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்று பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று [அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் விரிவுரையாளப் பணி புரிகிறார். தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளையும் கற்றுத் தேறியவர். பிரமஸ்ரீ தி. சீதாராம சாஸ்திரிகள் அவர்களிடம் வேதாகமங்களை விதிப்படி கற்றுணர்ந்தவர். விநாயகரின் பூரண அருளைப் பெற்றவர் ஜயா அவர்கள் என்பதுவெள்ளிடைமலை.

வரத்தல விநாயகரின் மகோற்சவம் நடத்த எங்களுக்கு ஒரு குருக்கள் தேவை. இதுகாலவரை வேளவா. மன்னுயிர்களுக்காக இரங்கி இறைவனை வேண்டும் சபாவமுடை இவர் (10-5-78) இன்று புதன்கிழமை ஆசாரிய அபிஷேகம் பெற்று திருவருள் பாலித்திருப்பது எங்கள் பாக்கியமே.

வரத்தல விநாயகக் கடவுளடி சரணம் எம் குருநாதன் திருவடி சரணம்.

த. சுப்பிரமணியம்
கயற்தப்பை.
தெல்லிப்பழை.

துன்பத்தைக் கண்டும், தோல்வியைக் கண்டும் பயம்படாதே. தன்பமும் தோல்வியுமே உன் வெற்றிக்கு அறிகுறி.

—விவேகானந்தர்.

"இந்தோனேஷிய இந்துக்களுக்கு அம்பிகைமீது நம்பிக்கை" - ஆத்மஜோதி மூத்தையா

[நாவலப்பிட்டி]

"தமது வேண்டுகோள்களை அம்பிகை நிறைவேற்றி வைக்கிறாள் என்ற அசையாத நம்பிக்கை இந்தோனேஷியாவில் உள்ள இந்துக்களிடம் இருப்பதை எனது விஜயத்தின்போது அவதானித்தேன்"

இவ்வாறு கடந்த மூன்று மாதங்களாக இந்தோனேஷியா முதலான நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு திரும்பிய ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் தமக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

திரு. நா. முத்தையா தொடர்ந்து பேசுகையில், "தமிழர்கள் எங்கு வந்தாலும் நமது தனித்துவத்தையும், கலாசாரங்களையும் மறக்கவில்லை. மற்றைய இனத்தவர்களோடு சேர்ந்து வாழும் தன்மையும் மற்றைய இனத்தவர்களைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளும் தன்மையுமாகிய உயர்ந்த பண்பாட்டை வளர்த்துவருவதைக் கண்டேன். இந்தோனேஷியாவிலுள்ள மீடான் நகரத்திலே பதினேழு கோயில்கள் உள்ளன. பல்வேறு சமூக மக்கள் அங்கு வழிபாடு செய்கின்றனர். தமது வேண்டுகோளை அம்பிகை ஈடேற்றி வைக்கிறாள் என்ற அசையாத நம்பிக்கையை அவர்களிடம் காணக்கூடியதாக இருக்கிறது

அங்குள்ள மக்களுக்குத் திருமணப்பதிவையும் திருமண சடங்குகளையும் நடத்திவைக்கும் பொறுப்பு கோயில் நிர்வாகத்திடம் அரசினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அங்கு நடைபெறும் திருமணத்தில் மணமக்கள் பிரதிக்ஞைசெய்து கொள்ளும் உறுதிவாசகங்கள் மிக முக்கியமானவை. இத்திருமணங்களில் சீதனக் கொடுமை தலைகாட்டுவதில்லை. விவாகரத்துக்களும் இல்லை. ஏதும் ஒடும்பப் பிரச்னைகள் தலைதூக்கினால் கோயில் நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினரே அதனைத் தீர்த்து வைக்கின்றனர்.

ஐந்து வயதிற்கும் ஏழு வயதிற்குள் இடைப்பட்ட பிள்ளைகளுக்குச் சமயம் கற்க வழி கோலப்பட்டிருக்கிறது. நல்லூறு ஆண்டுகள் அந்நாட்டில் வாழ்ந்தபோதிலும் தமிழ் மொழியை மறவாமல் பயன்படுத்திவருகிறார்கள். ஒரு காலத்தில் அந்நாடு முழுவதும் இந்துக்களை பரந்துவாழ்ந்ததாலேயே எனப் பெயர்பெற்றது என்றார். (உ)

இன்று ஆரம்பம்

வல்வை சிதம்பராவில் 3 நாள் பொருட்காட்சி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் கைத்தொழில், விஞ்ஞான, கல்விப் பொருட்காட்சி இன்று ஆரம்பமாகிறது. இக்காட்சி நாளையும் மறுதினமும் தொடர்ந்து நடைபெறும்.

இப் பொருட்காட்சியில் விஞ்ஞானத்தின் நவீன செயல்திறன்கள் மற்றும் விவசாய, கடற்றொழில் ஆய்வுகள், கைப்பணி, மரவேலை, மண்வியல், சுகாதாரம் ஆகியன பற்றியும் நவீன இயந்திரனியல் காட்சிக்கூடமும், நிழற்காட்சியும் இடம்பெற இருக்கின்றன.

கல்லூரி முகப்பில் 60 அடி உயரமான கோபுரம் ஒன்றும் சாரணர்களால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களினால் இப்பொருட்காட்சி நடாத்தப் பெறுகின்றது. [அ]

வற்றாப்பளைகண்ணகிஅம்மன் பொங்கல் உற்சவம்

(முல்லைத்தீவு)

வரலாற்றுச் சிறப்புள்ளதும் ஈழத்தின் வடபகுதியில் வன்னிப் பிரதேசத்தில் அமைந்துள்ளதுமான வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோயில் பொங்கல் உற்சவம் இம்மாதம் 22-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றது.

பொங்கல் நிகழ்ச்சியில் ஆரம்ப கிரியையான "பாக்குத் தெண்டுதல்" கிரியை நேற்று முன்தினம் திங்களன்று நடைபெற்றது. தீர்த்தம் எடுக்கும் கிரியை எதிர்வரும் 15-ம் திகதி திங்கட்கிழமையும் பொங்கல் உற்சவம் 22-ம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும்.

பொங்கல் விழாவுக்கு வருவதற்கும் பக்தாதிகளுக்கான அடியார்களின் வசதிக்காக போக்குவரத்து, பாதுகாப்பு, தண்ணீர் வசதி, சுகாதாரம் போன்ற சேவைகளை களிப்பதற்கான முயற்சிகளில் பரியாரி சபை சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளது. [அ]

ஆசிரியருக்குக் கடிதம்:

சந்நிதி முருகன் ஆலய பரிபாலகர் கவனத்திற்கு...

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய கற்றுப்புறங்களில் நிகழ்கின்ற சில விடயங்களை எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.

மாண்பு பொருந்திய நலத்தின் கற்றுப்புறங்களில் நிகழுகின்ற வைகரியங்கள் நீண்டகாலமாக [நடைபெறாமலாது இருந்துவருகிறது. அதாவது கோவிலின் மேற்கு வீதியில் உள்ள கோவில் கேணியில் நீராடுபவர்களாலும், நீராடிவிட்டு உடை மாற்றுபவர்களாலும் சாதாரண நேரங்களிலும் பூஜைக்காலங்களிலும் அடியார்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்படுகிறது. எனவே மேற்கூறிய வைகரியங்கள் அடியார்களை பாதிக்காதவகையில் மேற்கொள்வதற்கு கோவில் வரலாறு இருந்தும் வீதியிலிருந்தும் ஒதுக்குப்புறமான பகுதியை ஆலயபரிபாலனசபையோர் ஏற்பாடுசெய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்
ஆருகபக்தர்கள்.

ஃ ஃ ஃ

தொண்டமானாறு.

தொடரும் தொலைபேசித் தொல்லை

நீராவியடி உபதபால்நிலைய தொலைபேசி அடிக்கடி இயங்க மறுப்பதால் இப் பகுதி மக்கள் பெரும் இன்னலுக்குள்ளாகி வருகின்றனர்.

இதுதொடர்பாக தபால் நிலைய மேலதிகாரிகளைக் கொண்டுவந்து நிலைமையில் மாற்றம் ஏற்படாததினால் மக்கள் மனம் வருந்துகின்றனர். இக் குறைபாட்டை நீக்கி மக்களின் வசதிக் குறைவை நீக்க ஆவனசெய்யுமாறு வேண்டுகின்றோம்.

விவேகானந்தன்
எண்சோதிடர்
நீராவியடி.

புங்குடுதீவில்

திருக்குறள் மாநாட்டிற்கு தமிழகப் புலவர் வருகை?

[பாற்பரனை]

இம்மாதம் 20, 21, 22ம் திகதிகளில் புங்குடுதீவில் நடைபெறவிருக்கும் திருக்குறள் மாநாட்டிற்குத் தமிழகத்தில் இருந்து "தென்மொழி" ஆசிரியர் புலவர் பெருஞ்சித்திரனார் வருகை தர இணக்கம் தெரிவித்துள்ளார். இவர் இம்மாதம் 19ம் திகதி இங்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் மாநாட்டின் நெற்புகழ்ச்சிகளான கவியரங்கிற்கு உணர்ச்சிக் கவிஞர் காவி ஆனந்தனும், வழக்குரை மன்றத்திற்கு கோவை மகேசனும் மேன்முறையீட்டு மன்றத்திற்கு இலங்கைப் பல்கலைக்கழக யாழ்வளாகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸும் தலைமை வகிப்பார்கள்.

மாணவர் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கலைநிகழ்ச்சிகள் என்பனவும், பல்வேறு கலாமன்றங்களின் நாட்டுக்கூத்தும், நடன நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்திலங்கைவிலுமுள்ள கலாமன்றங்களும் திருக்குறள் ஆதரவாளர்களும் பெருமளவில் இவ்விழாவிற்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள்.

[வேலணை நிரு]

நாரந்தனை ஆலய உற்சவம்

(சரவணை)

சரவணை - நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 12ந்தேதி ஆரம்பமாகி பதினொரு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இம் மாதம் 20ந்தேதி பெரிய சப்பரத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். 22ம் திகதி நடைபெறும் தீர்த்த உற்சவத்துடன் திருவிழா முடிவடையும். (உ)

உத்தரப் பிரதேச லோகசபை இடைத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ் அமோக வெற்றி

19 பேருக்கு கட்டுப்பணம் இல்லை; 2 சட்டசபைத் தேர்தல்களிலும் வெற்றி

புதுடில்லி, மே 9

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் சொந்த மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் அசம்கார் தொகுதியில் நடைபெற்ற லோகசபை இடைத்தேர்தலிலும் இரண்டு சட்ட சபை இடைத்தேர்தல்களிலும் இந்திரா காங்கிரஸ் அமோகவெற்றி அடைந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்த இந்த முதலாவது இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான திருமதி மொஹினா இத்வாய் 85 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் ஜனதா கட்சி வேட்பாளரைத் தோற்கடித்தார்.

19 பேருக்கு கட்டுப்பணம் இல்லை

81 வேட்பாளர்கள் போட்டியிட்ட இத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திரு. சத்ரஜித் யாதவ் உட்பட 19 பேர் கட்டுப்பணத்தை இழந்தனர்.

இத்தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் திருமதி இத்வாய் இந்திய லோகசபையில் இந்திரா காங்கிரஸின் முதலாவது வேட்பாளராக இருப்பார்.

கடந்த தேர்தலில் ஜனதா கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு. ராம்நரேஷ் யாதவ் உத்தரப் பிரதேச முதல் அமைச்சராகப் பதவி ஏற்றதை அடுத்தே இத்தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்திராவுக்கு வடக்கிலும்

கடந்த பொதுத் தேர்தலில் உத்தரப் பிரதேசத்தின் 82 தொகுதிகளில் எந்த ஒரு தொகுதியையும் கைப்பற்ற முடியாத அப்போது திருமதி காந்தி சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சி இப்போது இந்திரா காங்கிரஸாகப் பிரிந்தபின்னர் இத்தொகுதியில் அமோக வெற்றியீட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தென்மாநிலத்தைப்போன்று திருமதி காந்திக்கு வடக்கிலும் செல்வாக்கு உள்ளது என்பதை இத்தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது.

ஜனதாகட்சி பதவிக்கு வந்த பின்னர் வடஇந்தியாவில் நடந்த இரண்டாவது இடைத் தேர்தல் இதுவாகும்.

திருமதி காந்தி அசம்கார் தொகுதியில் 5 நாள்கள் தங்கியிருந்து தேர்தல் பிரசாரம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சட்டசபை இடைத்தேர்தல்

இம்மாநிலத்தில் நடைபெற்ற இரண்டு சட்ட சபை இடைத்தேர்தல்களிலும் இந்திரா காங்கிரஸ் கட்சியே வெற்றிபெற்றது. (இ)

பங்களாதேஷில் விரைவில் புதிய அரசியல் அமைப்பு

டாக்கா, மே 9

பங்களாதேஷில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள் ஆட்சிமன்றத்திடம் ஒப்படைக்கப்படஉள்ளன என்று ஜனாதிபதி ஜனாப் எம்யாவுல் ரஹ்மான் தெரிவித்தார்.

விரைவில் அமுலுக்கு வர இருக்கும் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் இந்த அதிகாரமாற்றம் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளையும் ஆட்சி மன்றம் கட்டுப்படுத்தக் கூடிய விதத்தில் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

பிரிட்டிஷ் ஆளும்கட்சி தோல்வி

லண்டன் மே 9

பிரிட்டிஷ் அரசவரவுசெலவுத் திட்டம் தொடர்பான ஆலோசனை மசோதா மீதான வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டது.

சகல எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிராக வாக்களித்தமையினாலேயே இவ்வாக்கெடுப்பில் ஆளும்கட்சி தோற்கடிக்கப்பட்டது. (இ)

இஸ்ரேலின் 30-வது ஆண்டுவிழா: உஷார் நிலையில் படைகள்

ஜெருஸலம், மே 9

இஸ்ரேலின் 30வது ஆண்டு கொண்டாட்டங்கள் வரும் வியாழனன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படஉள்ளதாக அறிவிக்கப்பட்டது.

30வது ஆண்டு தினத்தை ஒட்டி அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழலாம் என்பதைக் கருத்திற்கொண்டு 30 ஆயிரம் துருப்புக்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று ஜெருஸலம் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆண்டுவிழாவையொட்டி நடைபெறும் வேலையில் பாலஸ்தீன கொரில்லாக்களினாலேயே அசம்பாவிதம் எதுவும் ஏற்படலாம் என்றே இஸ்ரேலியர் எதிர்பார்க்கின்றனர். (இ)

அமரர் சரவணமுத்து

வைத்தியக்கலை என்பது எல்லோருக்கும் ஒரு வைவந்த கலையாக வைகொடுப்பதில்லை. ஆனால் மீசாலை ஊர் அமரர் தம்பு சரவணமுத்து டாக்டர் பட்டம் பெற்ற தனது சேவையைத் தொடர்ந்த சில வருடங்களுக்கிடையிலேயே சிறந்த ஒரு வைத்தியர் என்று புகழீட்டிவிட்டார்.

பளையிலும் பூநகரியிலும் இவர் பணிபுரிந்த காலத்தில் இப்பகுதியில் இருந்து பெருந்தொகையான மக்கள் அங்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்றால் இவருடைய திறமையைப் பற்றி நாம் மேலும் அதிகம் கூறத்தேவையில்லை. இவரிடமே நோயாளிகளோடு உரையாடுவதும் அவர்களின் குறை நிறைகளை விசாரிக்கும் முறையிலும் நோயாளிக்கு அரை வாசி நோய் குணமாகிவிடும்.

இவருடைய உதவியாளர் பொதுவாக அவருக்கு நோய்களைப் பற்றியிருந்த அறிவும் நோயாளிக்கு அவரிடம் பற்றை ஊட்டியது. இவைப் பார்த்திய பின்பு தனது சொந்த ஊராகிய மீசாலையில் கண்டி வீதியில் தனிப்பட்ட வைத்திய சிகிச்சை செய்து எல்லா மக்களினதும் அன்பைப் பெற்றிருந்தார். மரணம் என்பது எல்லோருக்கும் பொதுவானது எனினும் வல்லவர்களையும் நல்லவர்களையும் இறந்த தெய்வ பக்தி உள்ளவர்களையும் நோயினால் வருந்தவிடாது நொந்த மனம் சலிக்க விடாது பாவிப்படுக்கவிடாது காலதேவன் அணைத்துக்கொள்கிறான். அந்த வரிசையில் அமரர் டாக்டர் சரவணமுத்துவும் ஒருவராவார்.

அ. ஆறுமுகம்

இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.

"அரசியல் ரீதியிலான இடமாற்றங்களை நிறுத்துக"

தொழிற்சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியல் ரீதியிலான நியமனங்களை உடன் நிறுத்தி சேவையில் உள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர்சங்க யாழ். கிளையால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பாரதிபாஷா வித்தியாசாலையில் திரு. எல். ஏ. அமரதாஸ தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் பின்வருமாறு:-

காவலாளர்களுக்கு 8 மணி நேர வேலை அல்லது மேலதிக 4 மணிநேர வேலைக்கு மேலதிக ஊதியம் வழங்கவேண்டும், பாடசாலைகளை அரசபொறுப்பேற்ற ஆண்டு தொடக்கம் 66 வரையான சேவை பென்சன் கால சேவையாக கருதப்படவேண்டும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் அரசாங்க பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமையை நாம் கண்டிக்கிறோம்; கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றும் பாடசாலை ஊழியர்களை திரும்ப சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டும்.

கடன் வழங்கு சமுகமூலம் கடன்பெறுவதற்கு வருடக்கணக்கில் காத்திருக்க வேண்டிய காரணங்களை கண்டுபிடித்து ஆவனசெய்ய வேண்டும். இளைப்பாறியவர்களுக்கு சரவது சம்பந்தப்பட்ட அட்டைகளை உடனடியாக வழங்க வேண்டும்.

திட்டமிட்ட பதவி உயர்வுகள் வழங்க அமைச்சுக்கு சிபார்சுசெய்யவேண்டும். பிள்ளைகள் தொகைக்கு ஏற்றபடி பாடசாலைகளில் கனிஷ்ட ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். இப்பிரச்சனைகள் அமைச்சரிடம் கவனத்துக்குக் கொண்டுவர அவசியமானால் வேலைநிறுத்தம் ஆரம்பிப்பது; தலைவராக எ. நவரத்தினமும், காரியதரிசியாக எஸ். வீரசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

அறிமுகப்படுத்துகிறோம். புதிய

ஹெடோனால் எம்60%

60% எம். சி. பீ. ஏ. ஏமீன் உப்பு அடங்கிய களை கொல்லி.

நெல் வயலில் வளரும் சந்தனக் கோரை சிறு கோரை நீர் கோவா மற்றும் எல்லா களைகளையும் அழிக்கும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள்.

அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் பேயர் விவசாய ரசாயனப் பொருட்கள்.

மூலப் பொருட்சத்து உத்பத்தியாளர்: பேயர் ஜெர்மனி.

BAYER

இலங்கையில் தயாரிப்போர்: ஹெக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெமினி — தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ஜெய்சங்கர்-தேவிகா
நடித்த
அன்புச்சகோதரர்கள்

வின்ஸர் (வசந்தபுரம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (வசந்தபுரம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்—வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

6-வது வெற்றி வாரம்
ராணி (சாவகச்சேரி) தினசரி 4 காட்சிகள்
ஏ. ச. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

12-ம் திகதி முதல் சிவாஜி — மஞ்சுளா நடித்த
உத்தமன்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் — சந்திரகலா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-00 p.m. only
Trap On Cougar Mountain
(Color) Jungle Adventure

சாந்தி (யாழ். நகர்) தொலை: 7643
தினசரி 10-15, 3-15, 6-15 19 00
சிவாஜி... ஜமுனா... வீரப்பா... கண்ணாம்பா
மருதநாட்டு வீரன்
— புத்தம் புதிய பிரதி —
மே 13ந் திகதி முதல் காலை 8-30 மணிக்காட்சி மட்டும்
உலகப் புகழ்பெற்ற அதிபயங்கர சர்க்கஸ் காட்சிகளை
உங்கள் குழந்தைகளுடன் கண்டுகளியுங்கள்
CIRCUS Color

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், விஜயா, சோ
நடித்த
வாயாடி
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ தொலை: 7692
சிவாஜி, பத்மினி
(யாழ். நகர்)
வியட்நாம் வீடு

சுருட்டுத்தொழிலாளர் பிரச்னை:

பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ள தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பளம் 32 ரூபா 50 சதத்தைத் தொடர்ந்தும்வழங்கப்படாதுவிட்டால், பரந்த அளவில் பொதுவேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென்றும், அதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படுமென்றும் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

32 ரூபா 50 சதம் சம்பளம் வழங்கப்பட்டால் சுருட்டுத் தொழிலில் நஷ்டமேற்படும் என்று நொண்டிச்சாட்டைக் கூறிக்கொண்டு பல முதலாளிகள் சம்பளத்தைக் குறைக்க முயற்சிக்கின்றனர். இதனைத் தொழிலாளிகள் ஏற்காது சரியான சம்பளத்தைப் பெறுவதற்கு ஐக்கிய வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த வேண்டும். கோக்குவிலில் எமது சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் சம்பளம் குறைப்பதையும், தொழிலாளர்கள் அநியாயமாகப் பழிவாங்கப்படும் நடவடிக்கையையும் எதிர்த்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கியப்பட்ட இப் போராட்டத்தை ஏற்றுமிடங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று கோரும் தீர்மானம் எமக்கட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர்: இ. சந்தரலிங்கம், செயலாளர்: த. செந்தில்செல்வன், பொருளாளர்: ந. சற்குருநாதன், 12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

துணைவி கொலை வழக்கு: தொகுப்புரை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

துணைவி கொலைவழக்கு விசாரணை நேற்று நடைபெற்று சட்டத்தரணிகள் தொகுப்புரை நிகழ்த்தினார்கள்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்ரீ எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் 77 மார்ச் 19ம் திகதி துணைவியில் அம்பலவாணரை கொலை செய்ததாக கந்தையா என்முகலிங்கம், அல்லது கின்னராசா என்பவர் மீதுகுற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசா, சட்டத்தரணி த. சோமசுந்தரம், சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகுவர். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்.

திருமலைக் கோஷ்டி

உதைபந்தாட்டச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டி இம்மாத முடிவில், வடமராணத்திற்கு கிரேகபூர்வ உதைபந்தாட்ட சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

வடமாராணத்திற்கு வரும் திருமலைக் கோஷ்டி முதலில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குடனும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியுடனும் இறுதியாக யாழ். உதைபந்தாட்ட லீக்குடனும் மோதவிருக்கின்றது.

திருமலைத் தெரிவுக் கோஷ்டியுடன், திருமலையில் உள்ள முன்னணி விளையாட்டுக் கழகம் ஒன்றும் சேர்ந்து மேற்படிச் சுற்றுலாவில் பங்கு பற்றுகின்றது.

இச்சுற்றுலாவுக்கான சகல ஏற்பாடுகளையும் திருமலை உதைபந்தாட்டச் சங்கமும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் காரியதரிசி திரு. எஸ். ஜேசுதாசனும், யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி பிலிப்ஸும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படிச் சுற்றுலாவின் போது, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்திலும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

(செ)

Rio (Jaffna)
Daily 4 Shows
Killers Are Challenged
Extended by Popular Demand

யேமனில் உயர் பதவி

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் சண்முகநாதன் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பௌதீக திட்டமிடல் பொறியியலாளராக யேமன் அரபுக்குடியரசில் உள்ள சானாவில் பதவி ஏற்றுள்ளார்.

பேராதனை வளாகத்தில் இயல் பொறியியல்துறையில் சிறப்புப்பட்டம் பெற்ற இவர் ஆசிய தொழில்நுட்ப நிறுவன புலமைப்பரிசில் பெற்று யாங்கொக் சர்வகலாசாலையில் எம். எஸ். ஸி. படிப்பை மேற்கொண்டார். இங்கு இவர் திட்டமிடலில் முதுமானிப் பட்டம் பெற்றார்.

ஓய்வுபெற்ற உதவி தொழில் ஆணையாளர் திரு. வி. சுப்பிரமணியத்தின் மூன்றாவது மகனான இவர் யாழ். சென் ஜோன்ஸ், யாழ். இந்துக் கல்லூரிகளின் பழைய மாணவரும் சிறந்த கிரிக்கெட் வீரருமாவார். (இ)

கணவன்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகை சேகரிப்பு பெற்று வருகிறார்.

இதுதொடர்பாக சிவசுப்பிரமணியம், சண்முகம், சிவபாக்கியம் ஆகியோரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

(இ)

பத்திரிகையாளர் பயிற்சி

கொழும்பிலுள்ள மன்றக் கல்லூரியில் அண்மையில் பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டனவாம்.

இந்தப் பயிற்சியில் கொழும்பிலுள்ள பத்திரிகைகளில் தொழில்புரியும் பத்திரிகையாளர்கள் மாத்திரம்தான் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகின்றது.

இந்தப் பயிற்சிக்கு ஒழுங்கு செய்வதில் தகவல் திணைக்களமும் சம்பந்தப்பட்டிருந்திருக்குமானால் நிச்சயமாக வடபகுதியிலிருந்தும் ஒரு தினசரிப் பத்திரிகை வெளிவந்துகொண்டிருக்கிறது. அங்கேயும் பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள் என்று சற்றாகிலும் எண்ணிப் பார்த்திருக்கவேண்டும்.

தகவல் திணைக்களம் வெளிவிட்டுள்ள தினசரிப் பத்திரிகைகள் பற்றிய விபரக்கொத்தைப் பார்த்தாகிலும் இதைத் தெரிந்துகொண்டிருக்கலாம்.

ஒருவேளை வடபகுதி என்றதும், வழமையாக மேற்கொள்ளப்படும் புறக்கணிப்பின் பிரதிபலிப்பாக இது இருக்கலாம்.

0 0 0

யாழ். நகரின் பழுதடைந்த பாதைகளையெல்லாம் விசேஷ ஆணையாளர் செப்பனிட்டு சீராக்குவதில் கரிசனைகாட்டி வருகிறார். பாராட்டுக்குரியது. மூன்றாம்குறுக்கு வீதியிலுள்ள குறுக்குப் பாதைகள் மீதும் அவரது கடாட்சம் விழும் என்று எதிர்பார்ப்போம்.

யாழ். நகரில் கலைரத்தின மோது [illegible] தமிழ் பெரியார்களின் இலைகள் இன்னமும் தலைகுனிந்தபடியேதான் இருக்கின்றன.

0 0 0

மகாவித்தியாலயம் ஒன்றில் நேர்முக சோதனை நடத்தச் சென்ற கல்வி அதிகாரி ஒருவர் பற்றி அக்கல்லூரி மாணவர்கள் கூறிய தகவல் ஆச்சரியமூட்டுவதாய் இருந்தது.

முதலாளி என்பதை தமிழில் சரியாக எழுதுவது எப்படி என்று பக்கத்திலிருந்த ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு அந்த அதிகாரியின் தமிழ் அறிவு இருந்ததாம்.

தமிழையே சரியாக எழுத முடியாதவர்கள் தமிழில் எப்படி சோதனை நடத்தமுடியும்? அதற்காக ஆயத்தம்செய்து கொண்டாகிலும் போயிருக்கலாமே!

ஆங்கிலத்தில் பாண்டித்தியம்பெற்ற இந்த அதிகாரிகளை தமிழ் ஆசிரியர்கள் நன்றாகப் 'பேய்க்' காட்டியிருப்பார்கள்

சோதனையிட வந்த அதிகாரி நூல்நிலையப் பக்கம் போகவில்லை. போயிருந்தால் அங்கே வாங்கெலிப் பெட்டியின் பின்னால் இருக்கும் போத்தலையும் கிளாசையும் கண்டு அதிர்ச்சியடைந்திருப்பார் அவர்' என்று கூறி மேலும் சிரித்தான் அந்த மாணவன் —"பேனு"

நோயாளர் கஷ்டம்

(சரவணை)

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் பலவித கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

நோயாளருக்கு தக்கவகையில் படுக்கை வசதிகள் இங்கு இல்லையாம். பலநோயாளர்கள் தரையில் படுக்கவேண்டிய நிலையிலும் இருக்கிறார்கள். பிரசவவிடுதியிலும் வேண்டிய வசதிகள் இல்லாமையால் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக ஆஸ்பத்திரி வைத்தியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இங்கு 'சலவைத்தொழில்' பாதிக்கப்பட்டுள்ளமையே போர்வைத் தட்டுப்பாடுக்கு காரணமாகும். (உ)

வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு

சகல தொகுதிகளுக்கும் மேலும் 10 லட்சம் ரூபா

(தொழும்பு)

தொகுதிகள் தோறும் வேலை வாய்ப்புக்களை வழங்கக்கூடிய வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அரசு மேலும் 10 லட்சம் ரூபா ஒதுக்கமுடியுமெனச் செய்துள்ளது.

பன்முறைப் படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் இத் தொகையை வழங்குவது பற்றி அரசு தீவிரமாக ஆலோசனை நடத்திவருகிறது.

இப்பணத்தைப் பெறுவதற்கு அந்தந்தப் பகுதி எம்.பி.களும் அரசாங்க அதிபர்களும் எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்று திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்கிரமசூரியா தெரிவித்தார். (இ)

"அன்னை அருள்" விளக்குப்பாட்டு

[யாழ்ப்பாணம்]

இலங்கை கலைவாணர் கில்லி சைக் குழுவினரின் "கலாவிநோதன்" கே. எம். கணபதிப்பிள்ளை (இன்னமவி) அளிக்கும் 'அன்னை அருள்' தொடர்கதை விளக்குப்பாட்டு நிகழ்ச்சி இம்மாதம் 12-ம் திகதிமுதல் 21-ம் திகதி வரை இரவு ஏழு மணிக்கு நிருநெல்வேலி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலில் நடைபெறும்.

தேர்தல்கால கலவர வழக்கு எதிரி விடுதலை

(மட்டக்களப்பு)

அம்பாறை தேர்தல் கால கலவர கொலைமுயற்சி வழக்கில், எதிரிவிடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 77 ஏப்ரல் 24-ம் திகதி யூ. என். பி. தேர்தல் பிரசாரக் கூட்டத்திலிருந்து காரில்வந்த உதெனிகுணவர்த்தனவையும் மற்றும் இருவரையும் சுட்டுக்கொலைசெய்ய முயற்சித்ததாக அம்பாறை விளைவாட்டுவழக மனேசர் ஹேமசிறி வீரக்கொடி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி எம். எம். தேவநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜராகினார். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜராகினார்.

சிங்களம் பேசும் ஜூரிசபை முன்னிலையில் 3 நாட்கள் நடைபெற்ற இவ்வழக்கில் எதிரி நிரபராதியென ஜூரிசபையினர் ஏகமனதாக தீர்ப்பளித்தனர்.

பல்கலைக்கழகத்தில் இம்முறை 5 ஆயிரம் பேர் அனுமதி

(தொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக வளாகங்களில் இம்முறை 5 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் விடானலி கல்பகே தெரிவித்துள்ளார்.

தென்மாகாணத்தில் அமைக்கப்படும் வளாகம் செப்டம்பர் அல்லது அக்டோபரில் திறவுப்படும் என்றும் அவ் வளாகத்தில் ஆரம்பத்தில் 225 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் டாக்டர் கல்பகே தெரிவித்தார்.

பெல்கொல்லை வளாகத்தில் இப்போது கலைத்துறை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். இதற்குப் பின்னரே விஞ்ஞானப்பிரிவு அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஆண்டு முடிவுக்குள் நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் நுட்பக்கல்லூரிகள் 36 ஆக அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

கொலைவழக்கில் கைதான முன்னாள் மூதூர் எம்.பி. மட்டுநகர் சிறைக்கு மாற்றம்

[மூதூர்]

மூதூர் முன்னாள் எம். பி. தங்கத்துரையையும் மற்றும் இருவரையும் இம்மாதம் 17ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருக்கோணமலை மாவட்ட நீதிபதி திரு எச். எம். அகலவத்தை உத்தரவிட்டுள்ளார்.

கிளிவெட்டியில் இடம்பெற்ற அப்புஹாமி தம்பதிகள் இரட்டைக் கொலைவழக்கில், எம். தங்கத்துரை, முன்னாள் கிராம சபைத் தலைவர் சுந்தரகுமாரவிக்னேஸ், தங்கராசா ஆகியோர் வெவ்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சந்தேகத்தின் மீது மூதூர்ப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் எதிரி தரப்புச் சட்டத்தரணிகள் சிறைச்சாலை சம்பந்தமாக ஆட்சேபம் கிளப்பியதைத் தொடர்ந்து இம்மூவரையும் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டு, குற்றப்பத்திரிகையைத் தயாரிப்பதில் பொலிஸாருக்கு அவகாசம் தேவைப்படுவதால் மீண்டும் விளக்கமறியலில் சந்தேகநபர்களை வைப்பதாகத் தெரிவித்தார்.

அரச தரப்பில் சட்டத்தரணி ரோகன் ஜயதிலகவும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் பா. நேமிநாதன், எம். கே. செல்வராஜா, விக்னேஸ்வரனின் அனுசரணையுடன் கிரேஷ்ட வழக்குரைஞர் சிவா. இராசரத்தினம் ஆஜராகினர். மீண்டும் விசாரணை இம்மாதம் 17ந் திகதி திருக்கோணமலையில் நடைபெறும். [கெ]

எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

துணைவி கொலைவழக்கு விசாரணையின்போது, நேற்று யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதரினால் விடுதலைசெய்யப்பட்டார்.

எதிரி நிரபராதி என ஜூரர்கள் ஏகமனதாகத் தெரிவித்ததைபடுத்து இவர் விடுதலையானார். [க.உ]

பலாத்கார வழக்கு: எதிரி அப்பீல் செய்கிறார்

[யாழ்ப்பாணம்]

பெரியவிளான் கிராமத்தைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுமி மீது பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, யாழ். மேல் நீதிமன்றத்தினால் 4 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கில் எதிரியான சூசை எட்வேர்ட், அத்தீர்ப்பை எதிர்த்துத் தமது சட்டத்தரணி மூலம் அப்பீல் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துள்ளார்.

இதன்பொருட்டு இவர் 3 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு, எம். வரதராஜன் ஆகியோர் இவ்வழக்கை எதிரி சார்பில் தாக்கல்செய்துள்ளனர். [பண் நிரு]

WANTED

Experienced Dispenser Wanted Immediately

The Jaffna Private Hospital,
395, Navalar Road,
Jaffna. 9269

விசேட ஆணையாளர்

[யாழ்ப்பாணம்]

வடபகுதி விடமைப்பு உதவி ஆணையாளர் திரு எம். ராஜரட்ணம் ஏழாலை ரோமசபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். [கெ]

ஆண்டு நிறைவு விழா

[பண்டத்தரிப்பு]

அளவெட்டி மகாஜனசபையின் 56 வது ஆண்டு நிறைவு விழாவும் அளவெட்டி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் புனரமைப்பும் கட்டமும் இன்று புதன்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

சபைத்தலைவர் வே. கப்பிரமணியம் தலைமையில் அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (உ)

பாடசாலைகள் பாதிப்பு

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதியில் பல புதிய பாடசாலைக் கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்டிருந்தும் ஒடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் முழுமைபெறாத நிலையிலிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் ஒடுகளுக்கு நிலவும் பலத்த தட்டுப்பாட்டின் காரணமாக இப்பாடசாலைக் கட்டடங்களைத் திறந்து வைக்க முடியாதிருப்பதாகவும் கூறப்படுகின்றது. புதிதாக வீடு கட்டுவோரும் ஒடுகள் தட்டுப்பாட்டினால் மிகுந்த சிரமம் அடைகின்றனர். ஒட்டு சுட்டான் அரசாங்க ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் ஒடுகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றதாம். [உ]

இந்திரா ஆஜராகவில்லை

புதுடில்லி, மே 9

ஷா கமிஷனுக்கு முன்னால் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திமீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது திருமதி காந்தி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை வழக்கறிஞர் மூலம் அவரது சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

அவசியம் ஏற்படும்போது தவிர, மற்றைய சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவையில்லை என்று நீதிமன்றம் அளித்த சலுகை காரணமாகவே திருமதி காந்தி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை

புதுடில்லி ஜூடிசரி நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது. [இ]

நாளை கருத்தரங்கு

[காரைநகர்]

தொண்டமானாறு கடலேரியை அபிவிருத்தி செய்வதுபற்றியும் அதன் மீன்வளங்களை சிறந்தமுறையில் உபயோகப்படுத்துதல்பற்றியும் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினர் நாளை 11ம் திகதி கருத்தரங்கு ஒன்றினை நடாத்த ஒழுங்குசெய்துள்ளார்கள்.

இக்கருத்தரங்கினை பருத்தித்துறை எம். பி. யும் கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவருமான திரு க. துரைரத்தினம் ஆரம்பித்து ஆலோசனை கூற அழைக்கப்பட்டுள்ளார். வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். [உ]

மீன்பிடி உபகரணங்கள்

[காரைநகர்]

காரைநகர் மேற்கு கல்லத்தாழ்வு இளைஞர்களின் கடற்றொழிலை ஊக்குவிக்குமுகமாக வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு கல்லத்தாழ்வு இளைஞர்களுக்கு கடன் முறையில் மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்றினை நடத்தவுள்ளார். [உ]

மேலும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் வக்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து துப்பறியும் குழு ஒன்றும் யாழ்ப்பாணத்திற்கு வரவிருக்கிறது. இக் குழுவினர் இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைபற்றி வேறு பிரிவாக விசாரணை நடத்துவார்கள்.

பிராணவாயு இன்றி வெற்றிகண்டனர்

காட்மாண்டு, மே. 9

பிராணவாயு உதவியின்றி எவரெஸ்ட் சிகரத்தை இரண்டு மலையேறும் வீரர்கள் நேற்றுமாக வெற்றிகொண்டனர்.

இவர்களில் ஒருவர் ஆஸ்திரிய நாட்டையும் மற்றவர் இத்தாலி நாட்டையும் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கா. பொ. இரத்தினத்தின் முயற்சியால் 32 வீடுகள் கட்டும் வேலை வேலணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காரைநகரில் 64 வீடுகள் அமைக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். இவ் வீடுகளை கட்டும் பணியில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள எம். பி.க்கள், வீடமைப்பு இலாகாவிற்கு காணிகளை எடுத்துக்கொடுத்தால், வீடமைப்பு இலாகா உடன் வீடுகட்டும் பணிகளை ஆரம்பிக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

திருநெல்வேலி திட்டம்

"திருநெல்வேலியிலுள்ள குடியேற்றத்திட்ட காணிகளை வீடமைப்பு இலாகாவிற்கு வழங்குமாறு நாம், அரசாங்க அதிபரைக் கோரியிருந்தோம். இதுவரை அரசாங்க அதிபர் இக்காணிகளைத் தராமையால் இங்கு சுயமுயற்சித் திட்டத்தில் வீடுகளை அமைக்க முடியாமலுள்ளது. சுயமுயற்சி வீடமைப்புத் திட்டத்தில் 8000 ரூபா கட்டிடப்பொருட்களை இலாகா வழங்கிவருகின்றது என்று தெரிவித்த உதவி ஆணையாளர்

"வீடுகட்டுவதற்குக் கடன் பெற்றுத்தருவதாகக் கூறி பலரிடம் அலுவலகத்தில் சம்பந்தமில்லாத பெறுமான உத்தியோகத்தர்கள் பணம் பறிப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இதற்கு பொதுமக்கள் ஏமாறக்கூடாது.

கடன்பெற விரும்புபவர்கள் இலாகாவிற்கு நேரடியாகவந்து சம்பந்தப்பட்ட விபரங்களை சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்ததும் நேரடியாக உதவி ஆணையாளர், காரியாலய உதவியாளர், பிரதம லிகிதரின் ஆலோசனையின் பேரில் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றும் கூறினார்,

வீடுகட்டுவதற்கு கடன்பெற விண்ணப்பிப்பவர்கள் யாராக விருந்தாலும் கடன்வழங்கத் தகுதியுடையவராக இருந்தால் நிச்சயமாக கடன் வழங்குவோம். இதற்கு தரகர்கள் தேவையில்லை என்றும் உதவி ஆணையாளர் தெரிவித்தார். [கெ]

முன்னாள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு" என்று கடந்தப்பட்ட முன்னாள் பிரதமரே கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் இந்தாலிய அரசாங்கம் அதை மறுத்துவிட்டது.

"திட்டமிட்டபடி எங்களின் மரணதண்டனையை நிறைவேற்றுகின்றோம்" என்று செம்படையினர் அறிவித்த சில மணி நேரத்தில் ஆல்டோ மோரோவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

61 வயதுள்ள திரு. மோரோ ஐந்து தடவைகள் இத்தாலிய பிரதமராகப் பதவி வகித்திருந்தார். நாட்டுமக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த இவர், டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதியாகலாம் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

[காரைநகர்]

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை விரைவில் கலவிர் பாடசாலையாக மாற்றப்படவிருக்கிறது. இதற்கான முயற்சியில் சாவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஈடுபட்டுள்ளார்.

இப்பத்திரிகை "எழுதாணி" லிமிட்டெட் கிராமணாதர் வாழ்ப்பாணம் வெல்லோலில் மேலிடி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1976-ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenadu" Telephone 389. Registered as a Newspaper in Ceylon.